9

# தேவனுடைய பொறுமையின் எல்லை முடிந்துபோகும்போது

## (1 இராஜாக்கள் 21)

*தேவனுடைய அன்பு மற்றும் இரக்கம் ஆகியவற்றின் மீதான பாடங்களை நாம் மகிழ்வுடன் அனுபவிக்கிறோம், ஆனால் தேவனுடைய நீதி மற்றும் பரிசுத்தம் ஆகியவற்றின் மீதான பாடங்களைப் பிரசங்கிக்காமல் தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் நம்மால் பிரசங்கிக்க முடியாது (நடபடிகள் 20:27) - இது பாவத்தைச் சகித்துக்கொள்ளக் கூடாமை என்ற தேவனுடைய மறுபக்கமாக உள்ளது.*

*நீதிமொழிகள் 29:1ல் நாம், "அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடிதியில் நாசமடைவான்" என்று வாசிக்கிறோம். வசனப்பகுதியானது கிருபையுடன் துவங்கி, ஒருவன் மாற்றம் அடைவதற்கு வாய்ப்புக்குப் பின் வாய்ப்பாகப் பெற்றும், தேவனுடைய புத்திமதியைக் கவனிக்க முரட்டாட்டமாக மறுக்கும் ஒரு தனிநபரைச் சித்தரிக்கிறது. கடைசியாகத் தேவனுடைய பொறுமை முடிவடைகிறது. தனது இருதயத்தைக் கடினப்படுத்தி இருந்த மனிதன் பின்பு "சகாயமின்றிச் சடிதியில் நாசமடைவான்"! என்ன ஒரு பயங்கரம் மிகுந்த வருங்காலக் காட்சி![1]*

*இந்தக் கொள்கையைப் பற்றிய விவரிப்புகளினால் வேதாகமம் நிறைந்துள்ளது. சோதோம் கொமோரா என்ற இரட்டை நகரங்கள், லோத்து என்னும் பெயர்கொண்ட ஒரு நீதிமான் சோதோம் நகருக்குள் குடிவந்தது போன்று, மாற்றம் அடைவதற்குப் பல வாய்ப்புக்களைக் கொண்டிருந்தன; ஆனால் அவைகள் அதிகம் அதிகமாக ஒழுக்கமற்றவைகளாக வளர்ந்தன. ஆதியாகமம் 19ம் அதிகாரம், அந்த நகரங்களில் இருந்த ஒழுக்கரீதியான மாசு மற்றும் சீரழிவு பற்றிக் கூறுகிறது. கடைசியில் தேவன், "அது போதும்!" என்று கூறினார். திடீரென்று அவைகள் "பரிகாரம் செய்வதற்கு அப்பால் முறிந்து போயின." அவற்றைத் தேவன் இந்தப் பூமியின் முகத்தில் இருந்து துடைத்துப்போட்டார்.[2]*

*இஸ்ரவேல் மற்றும் யூதா ஆகியவற்றின் அரசுகள், ஆண்டுகளுக்குப் பின் ஆண்டாகத் தேவனுடைய பொறுமையைச் சோதித்தன. அவைகள் திரும்பி வரும்படிக்குத் தேவன் தீர்க்கதரிசிகளை அனுப்பியிருந்தும், "அவர்கள் தேவனுடைய ஸ்தானாபதிகளைப் பரியாசம்பண்ணி, அவருடைய வார்த்தைகளை அசட்டைசெய்து, அவருடைய தீர்க்கதரிசிகளை நிந்தித்தபடியால், கர்த்தருடைய உக்கிரம் அவருடைய ஜனத்தின்மேல் மூண்டது; சகாயமில்லாமல் போயிற்று" (2 நாளாகமம் 36:16; என்னால் வலியுறுத்தப்படுகிறது). தேவன், "அது போதும்!" என்று கூறினார், திடீரென்று அவர்கள் - முதலில் இஸ்ரவேலும் பின்பு யூதாவும்*

*- நாசமடைந்தனர்.*

*தானியேல் 5ம் அதிகாரத்தின் "பெல்ஷாத்சார்" பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். அவனும் அவனது விருந்தினர்களும் ஒரு மதுபானம் விருந்தில் ஈடுபட்டு, தேவாலயத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட பரிசுத்த பாத்திரங்களில் மதுபானம் ஊற்றிப் பருகிக்கொண்டிருந்தனர், அப்போது "அந்நேரத்திலே (திடீரென்று) மனுஷ கைவிரல்கள் தோன்றி, விளக்குக்கு எதிராக ராஜ அரமனையின் சாந்து பூசப்பட்ட சுவரிலே எழுதிற்று ..." (வசனம் 5; என்னால் வலியுறுத்தப்படுகிறது): "மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின் ... நீ தராசிலே நிறுத்தப்பட்டு, குறையக் காணப்பட்டாய்" (வசனங்கள் 25, 27). தேவன், "அது போதும்!" என்று கூறினார். அந்த இரவிலேயே அந்த நகரம் விழுந்தது, பெல்ஷாத்சார் இறந்தான் (வசனம் 30). திடீரென்று அவன் "பரிகாரத்திற்கு அப்பால் நாசமடைந்துபோனான்."*

*புதிய ஏற்பாட்டில் நாம், ஏரோது அகிரிப்பாவின் வரலாற்றைக் காண்கிறோம் (நடபடிகள் 12). ஏரோது, மக்களுக்கு முன்பாக நின்றுகொண்டு ஒரு உரை நிகழ்த்தினான். யோசிப்பஸ் என்பவரின் கூற்றுப்படி, அவன் வெள்ளிச்சரிகையிட்ட மேலாடைகளை அணிந்திருந்தான். ஏரோது காலைச் சூரியனுடைய ஒளிக்கதிர்களில் பளபளத்தான். மக்கள், "... இது தேவசத்தம்!" என்று ஆர்ப்பரித்தனர் (வசனம் 22). அந்தப் பாராட்டுதலை ஏரோது ஏற்றுக்கொண்டான், மற்றும் தேவன் "அது போதும்!" என்று கூறினார். நடபடிகள் 12:23ம் வசனம், "அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்" என்று கூறுகிறது. (என்னால் வலியுறுத்தப்படுகிறது.) ஏரோது தனது வயிற்றில் உண்டான ஒரு பயங்கர மான வலியினால் துடுதுடித்தான் என்று யோசிப்பஸ் கூறினார். அவன் தனது படுக்கைக்குத் தூக்கிச் செல்லப்பட்டான், அங்கு அவன் மரிக்கும் வரையில் ஐந்து நாட்களுக்கு அதிலேயே மிகுந்த வேதனையுடன் இருந்தான். வேதாகமம், "அவன் புழுபுழுத்து இறந்தான்" என்று கூறுகிறது (வசனம் 23ஆ). அவன் "பரிகாரம் செய்வதற்கு அப்பால் முறிந்துபோனான்."*

*மற்ற விளக்கங்களும் தரப்பட முடியும்.[3] இருப்பினும் ஆகாப் மற்றும் யேசபேல் ஆகியோர் பற்றிய விளக்கத்தைக் காட்டிலும் அதிக வல்லமை நிறைந்த விளக்கம் வேறு எதுவும் இருப்பதில்லை. ஆகாபும் யேசபேலும், தேவனை ஒப்புக்கொள்ளவும் தங்கள் பொல்லாத வழிகளில் இருந்து திரும்பவும் வாய்ப்புக்குப் பின் வாய்ப்பாகப் பெற்றிருந்தனர், ஆனால் அவர்கள் அவ்வாறு திரும்பவில்லை. 1 இராஜாக்கள் 21ம் அதிகாரமானது அவர்களின் குணம் பற்றிய தீர்மானமான அதிகாரமாக உள்ளது. இதில் நாம், வேத வசனங்களிலேயே மிகவும் பழித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றைக் காண்கிறோம். மேலும் நாம், தேவன் "அது போதுமானது!" என்று கூறுகையில், தேவனுடைய பொறுமையின் எல்லை முடிவதையும் காண்கிறோம்.*

## நாபோத்துக்கு எதிரான பாவம் (21:1-16)

*21ம் அதிகாரம், "இவைகளுக்குப் பின்பு, ..." என்று தொடங்குகிறது, அதாவது எலியா பார்வையில் இருந்து மறைந்த பின்பு மற்றும் ஆகாப் தமது வழக்கமான நடவடிக்கைகளை மீண்டும் தொடர்ந்த பின்பு என்று இது அர்த்தப்படுகிறது. கர்மேல் மலையிலிருந்து திரும்பிவந்த ஆகாப் பயம் அடைந்தவராக இருந்தார் என்பதில் சந்தேகம் இல்லை; ஆனால் யேசபேல் எலியாவை அச்சுறுத்திய போது,*

*எலியா தப்பி ஓடினார். அந்த வேளையில் இருந்து ஆகாப் எலியாவிடத்தில் இருந்து எதுவும் கேள்விப்பட்டிருக்கவில்லை, எனவே ஆகாப் தமது வாழ்வின் வழியை மீண்டும் தொடர்ந்தார். 20ம் அதிகாரத்தில் நாம், இஸ்ரவேல் தீர் மானமான வெற்றியைப் பெற்ற இரு யுத்தங்களில் அவர் சீரியாவுக்கு எதிராகப் போரிட்டதை (மற்றும் அதன்பிறகு சீரியாவின் இராஜாவை விடுதலை செய்தமைக்காக ஆகாப் கண்டனம் பண்ணப்பட்டதைப்) பற்றி வாசித்தோம்.[4]*

*"இவைகளுக்குப் பின்பு, யெஸ்ரயேலனாகிய நாபோத்துக்கு யெஸ்ரயேலிலே சமாரியாவின் ராஜாவாகிய ஆகாபின் அரமனை அண்டையில் ஒரு திராட்சத்தோட்டம் இருந்தது" (வசனம் 1). நாபோத் தேவனுடைய கண்ணியம் வாய்ந்த மனிதர்களில் ஒருவராக இருந்தார். அவர் யெஸ்ரயேலில் ஆகாபின் அரண்மனைக்கு அருகில் ஒரு திராட்சத் தோட்டத்தைக் கொண்டிருந்தார். சமாரியா இஸ்ரவேலின் தலைநகரமாக இருந்தது, அது தெற்கில் பலமைல்கள் தூரத்தில் இருந்தது,[5] ஆனால் ஆகாபுக்கு யெஸ்ரயேலிலும் ஒரு அழகிய அரண் மனை இருந்தது. ஏவுதல் பெற்ற மற்றும் உலகப்பிரகாரமான பதிவேடுகள் கட்டிடம் கட்டுவதில் ஆகாபுக்கு இருந்த திறன் பற்றிச் சாட்சியளிக்கின்றன (1 இராஜாக்கள் 22:39). யெஸ்ரயேலில் இருந்த அரண்மனையின் நிலங்கள், ஒப்பனை செய்யப்பட்ட புல்வெளிகள், அழகிய மலர்கள் மற்றும் புதர்கள், மற்றும் கெம்பீரமான மரங்கள் ஆகியவற்றைக் கொண்டு, வனப்பு மிக்க வகையில் பாதுகாக்கப்பட்டு இருந்தன என்பதில் சந்தேகம் இல்லை. இருப்பினும், ஒரு விஷயம் இல்லாது இருந்தது. ஆகாப் தமது உணவு மேஜைக்காக கீரைகளையும் புத்தம்புதிய காய்கறிகளையும் வளர்க்க ஒரு சிறு நிலம் இல்லாதவராக இருந்தார். ஒருநாள் அரண்மனையின் ஜன்னல் வழியாக வெளியே தெரிந்த நாபோத்தின் திராட்சத் தோட்டத்தைக் கண்ணோக்கினார். ஆகாப் அதைப் பெற்றுக் கொள்ள வேண்டியவராக இருந்தார்.*

> *ஆகாப் நாபோத்தோடே பேசி: "உன் திராட்சத் தோட்டம் என் வீட்டிற்கு அடுத்திருக்கிறபடியால், அதைக் கீரைக்கொல்லையாக்கும்படி எனக்குக் கொடு, அதைப் பார்க்கிலும் நல்ல திராட்சத்தோட்டத்தை அதற்குப் பதிலாக உனக்குத் தருவேன்; அல்லது உனக்கு வேண்டுமானால், அதின் விலைக்கிரயமான பணத்தைத் தருவேன்" என்றான் (வசனம் 2).*

*முதலில் இதைப் பற்றிக் கேள்விப்படும்போது நாம், ஆகாபின் முன் மொழிதல் நியாயமானதாக ஒலிப்பதாக நினைக்கலாம், ஆனால் அது தேவனுடைய சித்தத்தை மீறுதலாக இருந்தது. இஸ்ரவேல் மக்கள் கானான் நாட்டிற்குச் சென்றபோது, ஒவ்வொரு துண்டு நிலமும் பல்வேறு கோத்திரங்களுக்கும் குடும்பங்களுக்கும் ஒதுக்கப்பட்டன. அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிலங்கள், அந்தந்தக் குடும்பங்களுக்கே உரியவையாக இருக்க வேண்டியதாயிற்று (லேவியராகமம் 25:24-34).[6]*

*"நாபோத் ஆகாபை நோக்கி: 'நான் என் பிதாக்களின் சுதந்தரத்தை உமக்குக் கொடாதபடி கர்த்தர் என்னைக் காப்பாராக' என்றான்" (வசனம் 3). அனேகமாக நாபோத், அந்த நிலத்தை விற்காது இருப்பதற்குப் பல காரணங்களைக் கொண்டிருக்கலாம். அந்தத் திராட்சத் தோட்டம் ஆச்சரியம் நிறைந்த நினைவுகளின் இடமாக இருந்தது. அவரது தந்தை இந்தத் திராட்சத்*

தோட்டத்தில் வேலைசெய்து இருந்தார் ... மற்றும் அதற்கு முன் அவரது தந்தை ... மற்றும் அதற்கு முன் அவரது தந்தை ... என்று அவரது முன்னோர்கள் யாவரும் அதில் வேலைசெய்திருந்தனர். நாபோத் தமது சிறுபிள்ளைப் பருவத்தில், திராட்சத் தோட்ட நிழலில் விளையாண்டதையும், சிரித்ததையும் மற்றும் கறுஞ்சிவப்பு நிற திராட்சச் சாறு தமது முகவாயில் வழிந்தோடும் மட்டும் திராட்சப்பழங்களை உண்டதையும் என்னால் காணமுடிகிறது. இப்போது அவர் தமது சொந்த மகன்களுடன் அதே திராட்சத் தோட்டத்தில் வேலைசெய்தார். *தேவன்,* "அதை யாருக்கும் கொடுத்துவிடாதே அல்லது விற்றுவிடாதே!" என்று கூறியிருந்ததே நாபோத் அதை விற்கமாட்டார் என்பதற்குக் காரணமாயிருந்தது. நாபோத் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதில் தீர்மானமாயிருந்தார். அவர், பாகாலுக்கு முழங்காற்படியாடாதிருந்த ஏழாயிரம் பேர்களில் ஒருவராக இருந்தார் (3ம் வசனத்தைக் கவனிக்கவும்)!

ஆகாப் ''சலிப்பும் சினமுமாய்'' தமது அரண்மனைக்குத் திரும்பிச் சென்றார்:

> இப்படி என் பிதாக்களின் சுதந்தரத்தை உமக்குக் கொடேன் என்று யெஸ்ரயேலனாகிய நாபோத் தன்னோடே சொன்ன வார்த்தைக்காக ஆகாப் சலிப்பும் சினமுமாய், தன் வீட்டிற்கு வந்து, போஜனம்பண்ணாமல், தன் கட்டிலின்மேல் படுத்து, தன் முகத்தைத் திருப்பிக்கொண்டிருந்தான் (வசனம் 4).

அற்பமான விளையாட்டுப் பொருள் ஒன்று மறுக்கப்பட்ட குழந்தையைப் போல, ஆகாப் தமது உதடுகளைப் பிதுக்கிக் கொண்டு படுத்துக்கிடந்தார். இது ஒரு வளர்ந்த மனிதரின் செயலாக இருப்பது இல்லை, ஒரு அரசர் இவ்வாறு செய்வது மிகவும் தகுதியற்றது. காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள்: ஒருவேளை, ஆகாப் ஒரு தந்த அரண்மனையில் இருந்திருக்கலாம்.[7] அவர், தந்தத்தினால் செய்யப்பட்ட கட்டில் ஒன்றில் படுத்துக்கிடந்திருக்கலாம்.[8] சுவர்கள் தந்தவேலைப்பாடுகளைக் கொண்டு இருந்திருக்கலாம்.[9] அவர் செல்வத்தினாலும் பொருள் வளத்தினாலும் சூழப்பட்டிருந்தார், இருப்பினும் அவர், மண்ணின் சிறுதுண்டு ஒன்றைப் பெற்றுக்கொள்ள இயலாமற் போனதற்காக உதடுகளைப் பிதுக்கிக் கொண்டிருந்தார். அவர், இரைக்குவியல்களினால் சூழப்பட்டிருந்தும், ஒரு சிட்டுக் குருவியின் உடலினுடைய துணுக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியாது போனதற்காக வருத்தப்படும் கழுகைப் போலிருந்தார். அவர், இறந்த உடல்களினால் சூழப்பட்டிருந்தும், ஒரு சுண்டெலியின் பாலாடைக் கட்டியைப் பெற்றுக்கொள்ள முடியாது போனதற்காக வருத்தப்படும் ஒரு சிங்கத்தைப் போலிருந்தார்.

விருந்துணவு மேஜையில் ஆகாபை யேசபேல் காணாதிருந்தாள். ஒருவேளை அவள் அவருக்குத் தட்டுநிறைய உணவை அனுப்பியிருந்து அது உண்ணப்படாது திரும்பி வந்திருக்கலாம். என்ன குறைபாடு என்று காண்பதற்கு வீட்டின் தலைவி சென்றாள். அவள் அவரது அறைக்குள் வந்தாள். அனேகமாக அவள் முதலாவதாக, அவரது நெற்றியின்மீது தனது கையை வைத்துப்பார்த்திருப்பாள். அவருக்குக் காய்ச்சல் ஒன்றுமில்லை. அவள், "நீர் போஜனம்பண்ணாதபடிக்கு, உம்முடைய மனம் சலிப்பாயிருக்கிறது என்ன?" என்று கேட்டாள் (வசனம் 5).

அவர் புலம்பும் குரலில் பின்வருமாறு பதில் அளித்தார்:

> "நான் யெஸ்ரயேலனாகிய நாபோத்தோடே பேசி: உன் திராட்சத்தோட்டத்தை எனக்கு விலைக்கிரயமாய்க் கொடு; அல்லது உனக்கு ராசியானால் அதற்குப் பதிலாக வேறே திராசத்தோட்டத்தை உனக்குத் தருவேன் என்றேன். அதற்கு அவன்: என் திராசத்தோட்டத்தை உமக்குக் கொடுக்கமாட்டேன் என்று சொன்னான்" (வசனம் 6).

*தேவனுடைய* தடை பற்றி நாபோத் கூறியிருந்ததை ஆகாப் குறிப்பிடவில்லை. அதைப்பற்றி ஆகாபுக்குக் கவலையில்லை. தமது விருப்பம் குலைக்கப்பட்டதே அவர் அக்கறை கொண்ட ஒரே விஷயமாக இருந்தது.

யேசபேல் அவரை இகழ்ந்தாள்: "நீர் இப்போது இஸ்ரவேலின்மேல் ராஜ்யபாரம்பண்ணுகிறவர் அல்லவா?" (வசனம் 7அ). உண்மையில் ஆகாப் இஸ்ரவேலை ஆளவில்லை - யேசபேல்தான் அதைச் செய்தாள் - ஆனால் அவள், "நீர் விரும்பியதை உம்மால் பெற இயலவில்லை என்றால், நீர் அரசராயிருப்பதில் பயனில்லை" என்று கூறினாள். பின்பு அவள் பின்வருமாறு கூறினாள்: "நீர் எழுந்து போஜனம்பண்ணி மனமகிழ்ச்சியாயிரும்; யெஸ்ரயேலனாகிய நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை நான் உமக்குக் கொடுப்பேன்" (வசனம் 7ஆ). "*நான்* அந்தத் திராட்சத் தோட்டத்தை உமக்குக் கொடுப்பேன். நீர் அதை *வாங்கச்* சென்றிருந்தீர்; அதை நான் உமக்குக் *கொடுப்பேன்.*"

இவ்விடத்தில் மேலாதிக்கம் செலுத்தும் ஒரு மனைவி மற்றும் மனைவியின் ஆட்சிக்கு உட்பட்ட கணவன் ஆகியோரைப் பற்றிய தலைசிறந்த சித்தரிப்பு உள்ளது. ஞானமுள்ள மனைவிகள் தங்கள் கணவர்களை நடத்துனர்களாக இருக்கும்படியும், முதன்மையாய் செயலாற்றும்படியும் ஊக்குவித்தல் தங்களுக்கு அவசிமானது என்று அறிந்திருக்கின்றனர். இருப்பினும் இங்கு, கணவர் செயல்விளைவு அற்றவரானபோது, மனைவி அவரது செயல்பாட்டை மேற்கொள்ளுகிறாள். அவரது பிரச்சனையை எதிர்கொள்ளும்படி அவரை ஊக்குவிப்பதற்குப் பதிலாக, அவள் "எனது வழியை விட்டு வெளியேறுங்கள்; நான் அதைச் செய்வேன்" என்று கூறினாள்; மற்றும் அவள் அதைச் செய்ய அனுமதிப்பதில் அவர் மகிழ்ச்சியடைந்தார்.

இப்போது நாம், மனிதகுல வரலாற்றில் மிகவும் பச்சைத் துரோக மான இரத்தப் படுகொலைச் சூழ்ச்சி ஒன்றிற்கு வருகிறோம். ஒரு மஃபியா [கொள்ளைக்] கும்பலின் தலைவன் இதைத் திட்டமிட்டு இருந்தால், நாம் திகைப்படைந்திருக்க மாட்டோம்; ஆனால் இது, தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவரும், தேவனுடைய மக்களின் அரசராக இருந்தவருமான ஒருவரின் பெயரில் செய்யப்பட்டதாக இருந்தது!

> அவள் [யேசபேல்] ஆகாபின் பெயரால் நிருபங்களை எழுதி, அவன் முத்திரையை அவைகளுக்குப் போட்டு, அந்த நிருபங்களை நாபோத் இருக்கும் பட்டணத்தில் அவனோடே குடியிருக்கிற மூப்பரிடத்துக்கும் பெரியோரிடத்துக்கும் அனுப்பினாள். அந்த நிருபங்களில் அவள் எழுதினது என்னவென்றால்: "நீங்கள் உபவாசம் என்று பிரசித்தப்படுத்தி, நாபோத்தை ஜனத்தின் முன் நிறுத்தி" (வசனங்கள் 8, 9).

*இந்தச் சூழ்ச்சியில், தேவனுடைய பிரமாணங்கள் கருவியாகப் பயன்படுத்தப்பட்டன. தேவனுடைய நியாயப்பிரமாணங்களை யேசபேல் வெறுத்தாள். இவ்வகையில் யெகோவாவினுடைய நியாயப்பிரமாணங்களைப் பிறழ்வுபடச் செய்தல் என்பது அவளுக்கு என்ன ஒரு சந்தோஷத்தை கொடுத் திருக்க வேண்டும்! உபவாசத்தை அறிவிக்கும்படி செய்தல் என்பது பிறழ்வு செய்யப்பட்ட முதல் பிரமாணமாக இருந்தது. உபவாசங்கள் தேவனுடைய கோபத்தைத் தவிர்ப்பதற்கு பயன்படுத்தப்பட்டன (கவனிக்கவும்: 2 சாமுவேல் 21:2; யோசுவா 9:11; உபாகமம் 21:9).*

*மக்கள் எல்லாரையும் ஈடுபடச் செய்தல் பற்றியது பிறழ்வு செய்யப்பட்ட இரண்டாவது பிரமாணமாக இருந்தது. தேவன் எல்லா மக்களமீதும் கோபமாக இருக்கையில், எல்லா மக்களும் உபவாசிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். அறியப்படாத ஒரு குடிமகனின் மரணதண்டனைக்கு ஏதுவான குற்றத்தினால், நகரம் குற்ற மேகத்தின் கீழ் இருந்ததாகத் தலைவர்கள் நடித்தனர். இந்த நிகழ்ச்சியில், ஆகானுடைய விஷயத்தில் யோசுவாவின் செயல்முறை, பேய்த்தன மாக போலிநடிப்புச் செய்யப்பட்டதை நாம் காண்கிறோம் (யோசுவா 7).*

*யோசிப்பஸ் என்பவரின் கூற்றுப்படி, நாபோத் என்பவர், மக்கள் அனைவராலும் மதிக்கப்பட்டவராக இருந்தார். அவர் "ஜனத்தின் முன் நிறுத்த(ப்)"பட்டார் என்பது கனத்திற்குரிய இடத்தைச் சுட்டிக்காண்பித்தது.*

*யேசபேலின் அறிவுறுத்துதல்கள் தொடர்ந்தன: " 'தேவனையும் ராஜாவையும் தூஷித்தாய்' என்று அவன்மேல் சாட்சிசொல்லுகிற பேலியாளின் மக்களாகிய இரண்டுபேரை[10] அவனுக்கு எதிராக நிறுத்தி, அவனை வெளியே கொண்டுபோய் அவன் சாகும்படிக்கு அவனைக் கல்லெறியுங்கள்" (வசனம் 10). அவர்களின் சூழ்ச்சியில் தேவனுடைய பிரமாணங்களில் மேலும் மூன்று பிரமாணங்கள் பிறழ்வுபடுத்தப்பட்டன: (1) ஒரு குற்றச்சாட்டானது இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே காரியம் நிலைவரப்படவேண்டும் என்று நியாயப்பிரமாணம் கூறிற்று (எண்ணாகமம் 35:30; உபாகமம் 17:6; 19:15); (2) தேவ தூஷணம் என்பது மரணதண்டனை தரப்பட வேண்டிய குற்றமாகும் என்று நியாயப்பிரமாணம் கூறிற்று (தேவனுடைய பிரதிநிதி என்ற வகையில் உள்ள இராஜாவுக்கு எதிராகத் தூஷணம் கூறுதல் தேவனுக்கு எதிராகத் தூஷணம் கூறுவதைப் போன்றதாகவே இருந்தது; காண்க - லேவியராகமம் 24:15); மற்றும் (3) தேவதூஷணம் என்ற பாவத்திற்கு நியாயப்பிரமாணம் கல் லால் எறிந்து கொல்லுதலினால் மரணதண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்று குறிப்பிட்டது (லேவியராகமம் 24:14-16). யேசபேல் எப்படிப்பட்டதொரு பேய்த்தனமான மனநிலையைக் கொண்டிருந்தாள்!*

*நாட்டின் ஒழுக்கரீதியான மற்றும் ஆவிக்குரிய நிலை ஆகியவை 11ம் வசனத்தில் (யேசபேல் மீதான பயம் உண்டாக்கியவற்றுடன்) காணப்படுகிறது: "அவன் பட்டணத்திலே குடியிருக்கிற மூப்பரும் பெரியோருமாகிய அவன் பட்டணத்து மனுஷர், யேசபேல் தங்களுக்கு அனுப்பின நிருபங்களில் எழுதிக் கட்டளையிட்டபடியே செய்தார்கள்."*

*என்ன நடந்தது என்பதை, அன்று காலையில் எழுகையில் நாபோத்தின் கண்ணோக்கில் இருந்து கற்பனை செய்து பாருங்கள். அவர் தமது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் காலை உணவை மகிழ்வாக அனுபவித்தார். நகரத்தில் ஒரு விசேஷித்த உபவாசம் நடக்க வேண்டும் மற்றும் எல்லாரும் அதில் கலந்து*

கொள்ள வேண்டும் என்ற வார்த்தை வந்தது.

நியமிக்கப்பட்ட இடத்திற்கு நாபோத் சென்றடைந்தபோது, உயர்ந்த இடத்தில் தாம் அமர்த்தப்பட்டதைக் குறித்து சந்தோஷ வியப்படைந்தார். செயல்முறை தொடங்கிற்று. மக்கள், "தேவனுடைய கோபம் நம் மீது எவ்வாறு வந்தது? பாவம் எங்கே [மறைந்து] கிடக்கிறது?" என்று கேட்டனர். நாபோத் திகைப்படையும் வண்ணமாக, இரு மனிதர்கள் எழுந்து நின்றனர் - அவர்கள் சமூகத்தில் அருவருக்குத் தக்கவகையில் பிரபலமாக இருந்தனர். அவர்கள் நாபோத்துக்கு முன்பாக நடந்து சென்று நின்று, அவரை நோக்கித் தங்கள் விரல் களைச் சுட்டிக்காண்பித்து, "நாபோத் தேவனைத் தூஷித்துள்ளார். நாபோத் அரசரைத் தூஷித்துள்ளார்!" என்றனர். நாபோத், "இது ஒரு நகைச்சுவையாக இருக்க வேண்டும். எவரொருவருக்கும் இதை நிச்சயமாக நம்பமாட்டர்கள்" என்று நினைத்தார். இருப்பினும் அவர் சுற்றிலும் பார்த்தபோது, மூப்பர்கள் மற்றும் நடத்துனர்களின் கடினமான முகங்களையே கண்டார். அவரது நண்பர்களும் அயலகத்தாரும் புறம்பே திரும்பினர்.

நாபோத் நகரத்தை விட்டு வெளியே இழுத்துச் செல்லப்படுகையில், "நிச்சயமாகவே இந்தத் திகிலூட்டும் கனவு விரைவில் முடிய வேண்டும்" என்று நினைத்தார். அவர்கள் கல்லெறியும் இடத்திற்கு வந்தனர். நாபோத் முழங்காற்படியிடும்படி வற்புறுத்தப்பட்டார். இரண்டு சாட்சிகள் தங்கள் கைகளில் பெரிய கற்களுடன் முன்னதாக அடியெடுத்து வைத்தனர்; அவர்கள் அவற்றை நாபோத்தை நோக்கி எறிந்தனர். வேதனை தொடங்கியது. அவரது உடல் மற்றும் தலை மீது கற்கள் மழையெனப் பொழிந்தன. கடைசியாக அவரது உடல் முறிந்தது, அவரது மண்டையோடு சிதறடிக்கப்பட்டது, மற்றும் அவர் தமது உணர்வை இழந்தார். அவர் ஒரு கடைசிப் பெருமூச்சை விட்டு இறந்தார், கர்த்தருக்குத் தமது ஒப்புக்கொடுத்தலுக்காக வேதசாட்சியாக மரணமடைந்த வரானார்.

பயங்கரம் அத்துடம் முடிந்துவிடவில்லை. மற்றவர்கள் நாபோத்தின் திராட்சத் தோட்டத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள். தளர்வான முடிவுகள் யாவும் இறுக்கி முடியப்பட வேண்டும். பத்து அதிகாரங்களுக்குப் பிற்பாடு 2 இராஜாக்கள் 9:26ல், 1 இராஜாக்கள் 20ல் நாம் கண்டறியாத ஒரு பயங்கர மான விபரம் கூட்டப்பட்டுள்ளது: அவர்கள் நாபோத்தின் பையன்களை இழுத்து வந்து அவர்களையும் கொன்றனர்!

"பிற்பாடு யேசபேலுக்கு, நாபோத் கல்லெறியுண்டு செத்தான் என்று சொல்லி யனுப்பினார்கள்" (வசனம் 14). கடிதத்தில் ஆகாபின் பெயரை யேசபேல் கையெழுத்திட்டிருந்தாள், ஆனால் அவள் எவரொருவரையும் முட்டாளாக்க வில்லை. நகர அதிகாரிகள் அந்தக் கடிதத்தை அனுப்பியது யார் என்று அறிந்தி ருந்தனர். எஜமானியார் என்று அவர்கள் அறிந்திருந்தனர்; தாங்கள் யாருக்குத் தகவல் அனுப்ப வேண்டும் என்று அவர்கள் அறிந்திருந்தனர்.

யேசபேல் தனது அழகிய தோட்டங்களில் நடந்துகொண்டு இருப்பதை அல்லது அமர்ந்துகொண்டு இருப்பதை அல்லது தனது நேர்த்தியான உடைகளுடன் அவளது இசை அறையில் அமர்ந்து அரசரின் பாடகர் குழுவினு டைய இசைக்கச்சேரியைக் கவனித்துக் கொண்டு இருப்பதைச் சித்தரித்துக் கொள்ளுங்கள். வார்த்தை வந்தது: "நாபோத் கல்லெறியுண்டு செத்தான்." தனது கணவன் மற்றும் பையன்கள் என்ற அன்புக்குரியவர்களின் இரத்தத்தை

நக்குவதற்காக அரைப்பட்டினியாகக் கிடந்த நாய்கள் அவர்களின் உடல்களுக்கு எதிராகச் சண்டையிட வெறிபிடித்து ஓடுவதைக் கண்ட, ஒரு தாய்மீது யேசபேல் இரக்கச் சிந்தனை எதுவும் கொண்டிருக்கவில்லை.[11] முறிந்துபோன அந்த உடல்களை அடுக்கிவைக்க முயற்சிசெய்து, அவர்களின் உடல்களை சவ அடக்கத்திற்கு தயார்செய்து, தண்ணீரினால் மாத்திரமின்றி தனது கண்ணீரினாலும் கழுவிய அந்தத் தாயைப் பற்றிய சிந்தனை எதையும் அவள் கொண்டிருக்கவில்லை. யேசபேல் புன்முறுவல் பூத்தவளாக, சிடுசிடுப்புடன் இருந்த தனது கணவரிடத்தில் சென்றாள், ஏனெனில் நாட்டின் சட்டமானது காட்டிக்கொடுப்பவனின் நிலம் அரசனுக்கு உரியது[12] என்று கூறிற்று.

> நாபோத் கல்லெறியுண்டு செத்ததை யேசபேல் கேட்டபோது, ஆகாபை நோக்கி: நீர் எழுந்திருந்து, யெஸ்ரயேலனாகிய நாபோத் உமக்கு விலைக்கிரயமாய்க் கொடுக்கமாட்டேன் என்று சொன்ன திராட்சத்தோட்டத்தைச் சொந்தமாய் எடுத்துக் கொள்ளும்; நாபோத் உயிரோடில்லை, அவன் செத்துப்போனான் என்றாள் (வசனம் 15).

யேசபேல், "ஆகாப், நான் அதைச் செய்யமுடியும் என்று உங்களுக்குக் கூறினேனே - அதை நான் செய்திருக்கிறேன்!" என்று பெருமையுடன் கூறினாள்.

இது உதட்டைப் பிதுக்கிக் கொண்டிருந்தவரை அதிகாரம்மிகுந்தவராக மீண்டும் திருப்பிற்று! "நாபோத் செத்துப்போனதை ஆகாப் கேட்டபோது, அவன் யெஸ்ரயேலனாகிய நாபோத்தின் திராட்சத்தோட்டத்தைச் சொந்தமாய் எடுத்துக்கொள்ளும்படி எழுந்துபோனான்" (வசனம் 16). ஆகாப் படுக்கையை விட்டு எழுந்து, தமது உடைகளை உடுத்திக்கொண்டு, ஒருவேளை அவசரமாக ஒரு உணவை உண்டுவிட்டு, அனேகமாகத் தமது உதடுகளில் ஒரு பாடலுடன் அந்தத் திராட்சத்தோட்டம் நோக்கிச் சென்றார்.

## தேவனுடைய பொறுமையின் எல்லை முடிந்துபோனது (21:17-24, 27-29; 22:38; 2 இராஜாக்கள் 9:21-36)

அதுவாகவே இது இருந்தது. தேவனுடைய பொறுமையின் எல்லை முடிந்தது. தேவன், "அது போதும்!" என்று கூறினார். 17ம் வசனத்தில் நாம், "கர்த்தருடைய வார்த்தை திஸ்பியனாகிய எலியாவுக்கு உண்டாயிற்று" என்று வாசிக்கிறோம். இங்கு நாம், "கர்த்தருடைய வார்த்தை" என்பதை மீண்டும் காண்கிறோம். எலியா தமது ஊழியத்திற்குத் திரும்பியிருந்தார்! தேவன் எலியாவிடத்தில் பின்வருமாறு கட்டளையிட்டார்:

> நீ எழுந்து, சமாரியாவிலிருக்கிற இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபைச் சந்திக்கும்படி போ; இதோ, அவன் நாபோத்தின் திராட்சத்தோட்டத்தைச் சொந்தமாய் எடுத்துக்கொள்ள அங்கே போயிருக்கிறான். நீ அவனைப் பார்த்து: நீ கொலை செய்ததும் எடுத்துக்கொண்டதும் இல்லையோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின ஸ்தலத்திலே உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும் என்று கர்த்தர் சொல்லு

*கிறார் என்று சொல் (வசனங்கள் 18, 19).*

*திராட்சத் தோட்டத்தில், ஆகாப் தம்முடன் வந்தவர்களோடு தமது புதிய சொத்தில் நடந்து கொண்டிருந்தார். அவர் அனேகமாகத் தமது தோட்டத்திற்காகத் திட்டமிட்டுக் கொண்டிருந்து இருப்பார்: "இங்கு நான் தக்காளிச் செடிகளை நடுவேன் ... அங்கு மக்காச்சோளம் நடுவேன் ... அவ்விடத்தில் வெங்காயங்களை நடுவேன் ... மற்றும் ... பூக்கோசுகளை நடுவேன் ... பூக்கோசுகளை மறந்துவிட்டேனே." ஆகாப் கவனமாகப் பார்த்திருந்தால், மென்மையான மண்மீது காலடித் தடங்களை அவர் பார்த்திருப்பார் - அவைககள் நாபோத்தின் பெரிய காலடித்தடங்களாகவும், நாபோத்தின் மனைவியின் சிறிய காலடித்தடங்களாகவும் மற்றும் நாபோத்தின் மகன்களினுடைய மிகச்சிறிய காலடித்தடங்களாகவும் இருந்திருக்கும் - ஆனால் அவற்றைப் பொறுத்தமட்டில் ஆகாப் பார்வையற்றவராக இருந்தார். பின்பு அவர் ஒரு காலடித்தட ஓசையைக் கேட்டார். திரும்பிப் பார்த்த போது, அவர் தமது மனச்சாட்சி உருவமெடுத்து வந்திருப்பதை - தமது பழைய வினைப்பயனான எலியா இன்னமும் முரட்டு உடையில் இருப்பதை அவர் கண்டார், அவரது கண்கள் தங்களின் ஆழ்ந்த இமைகளுக்குள் நெருப்புப் போன்று பிரகாசிப்பதைக் கண்டார். ஆகாப், "என் பகைஞனே, என்னை கண்டுபிடித்தாயா?" என்று கேட்டார் (வசனம் 20அ). சில எழுத்தாளர்கள், "நீ என்னைக் கண்டுபிடித்து*விட்டாயா*?" என்று ஆகாப் அர்த்தப்படுத்தியதாக நினைக்கின்றனர். எலியா, "[நான் உனது பகைஞன் என்பதால் அல்ல, ஆனால் உன் பாவத்தின் காரணத்தால்] கண்டுபிடித்தேன்; கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய நீ உன்னை விற்றுப்போட்டாய்." என்று பதில் அளித்தார் (வசனம் 20ஆ).*

*பொல்லாப்புக்குத் தம்மை விற்றுப்போடுகிற நபர், தம்மை ஒன்று மற்றதற்கு விற்றுப்போட்டு இருப்பதை எவ்வித மாறுதலுமின்றி கண்டறிகிறார். ஆகான் தன்னை, ஒரு நல்ல சால்வைக்காகவும் ஒரு பொன்பாளத்திற்காகவும் விற்றுப்போட்டான், கடைசியில் ஒன்றுமற்றவனாக முடிவடைந்தான். யூதாஸ் தன்னை முப்பது வெள்ளிக்காசுகளுக்காக விற்றுப்போட்டும் அவற்றில் இருந்து பயன் எதுவும் பெறவில்லை. ஆகாப் தம்மை ஒரு நிலத்துண்டிற்காக விற்றுப்போட்டார், ஆனால் அவரது நாட்கள் எண்ணப்பட்டிருந்தன.*

*யாரேனும் ஒருவர்: "ஒரு நிமிடம் பொறுங்கள். ஆகாப் நாபோத்தைக் கொலைசெய்யவில்லையே; அவர் ஒப்பந்தத்தைக்கூட வெளியே அனுப்பவில்லையே" என்று மறுக்கலாம். அது உண்மையே, ஆனாலும் ஒரு சந்தர்ப்பத்தில் ஆகாப், என்ன நடந்துகொண்டிருந்தது என்பது பற்றி அனேகமாக அறிந்திருக்கலாம். அவ்வாறு அவர் அறிந்திருக்கவில்லை என்றால், அவர் அதை அறிய வேண்டியவராக இருக்க வேண்டும். ஒரு விஷயம் நிச்சயமானதாக உள்ளது: அவர் தேவபக்தியற்ற செய்கையின் கனிகளை ஏற்றுக்கொள்ள மனவிருப்பமாக இருந்தார். வீட்டில் எடுக்கப்படும் முடிவுகளுக்குக் கணவரே பொறுப்பாளியாக இருக்கிறார் என்பது வேதாகமம் முழுவதிலும் ஏற்படுத்தப்படும் ஒரு கருத்தாக உள்ளது. ஒரு கணவராக மற்றும் ஒரு தந்தையாக இருத்தல் என்பது அச்சத்திற்குரிய பொறுப்பாக உள்ளது. அந்தப் பணியை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுங்கள்!*

*எலியாவின் குரல் அழிவின் குரல் போலத் தொடர்ந்தது:*

நான் உன்மேல் பொல்லாப்பு வரப்பண்ணி [இவ்விடத்தில் வார்த்தை விளையாட்டு ஒன்றுள்ளது: நீ பொல்லாப்புக்கு உன்னை விற்றுப்போட்டதால், நீ உன்னை விற்றுப்போட்ட விஷயத்திற்கே நான் உன்னை ஒப்புக்கொடுப்பேன்] உன் சந்ததியை அழித்துப்போட்டு, ஆகாபுக்கு சுவரில் நீர்விடும் ஒரு நாயாகிலும் இராதபடிக்கு இஸ்ரவேலில் அடைபட்டவனையும் விடுபட்டவனையும் சங்கரித்து, நீ எனக்குக் கோபம் உண்டாக்கி, இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணினதினிமித்தம், உன்னுடைய குடும்பத்தை நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் குடும்பத்துக்கும், அகியாவின் குமாரனாகிய பாஷாவின் குடும்பத்துக்கும் சமானமாக்குவேன் என்றார் என்று சொன்னான் (வசனங்கள் 21, 22).

எலியா குறிப்பிட்ட இரண்டு குடும்பங்களாகிய, யெரொபெயாமின் குடும்பமும் பாஷாவின் குடும்பமும், பாவத்தின் காரணமாக அழித்துப்போடப்பட்டிருந்தன. எலியா தொடர்ந்தார்:

யேசபேலையும் குறித்துக் கர்த்தர்: நாய்கள் யேசபேலை யெஸ்ரயேலின் மதில் அருகே தின்னும். ஆகாபின் சந்ததியில் பட்டணத்திலே சாகிறவனை நாய்களும், வெளியிலே சாகிறவனை ஆகாயத்துப் பறவைகளும் தின்னும் என்றார் (வசனங்கள் 23, 24).

இதைக் காட்டிலும் அதிக பயங்கரமான அழிவின் முன்னறிவித்தல்களைக் கற்பனை செய்து பார்த்தல் கடினமானதாக இருக்கும்!

நாம் கவனிக்க வேண்டிய இன்னும் ஒரு விபரம் உள்ளது: 2 இராஜாக்கள் 9:25ன்படி, எலியா ஆகாபை எதிர்கொண்டிருந்தபோது குறைந்தபட்சம் மேலும் இரண்டு மனிதர்கள் அங்கிருந்தனர். அவர்களில் ஒருவர் ஆகாபின் படைத்தலைவர்களில் ஒருவரும் ஆகாபின் இடத்தை எடுத்துக்கொள்ளார் என்று தேவன் அறிவித்திருந்தவருமான *யேகூ* ஆவார் (1 இராஜாக்கள் 19:16f.). இந்தக் காட்சியும் செய்தியும் யேகூவின் மனதில் அழிக்க இயலாதபடி செதுக்கப்பட்டன என்பதில் சந்தேகம் இல்லை.

நாம் 27ம் வசனத்திற்கு வரும்போது, எதிர்பாராத, ஏறக்குறையை திகைப்புக்குரிய விஷயத்தைக் காண்கிறோம். ஆகாப் பயமடைந்திருந்தார். "ஆகாப் இந்த வார்த்தைகளைக் கேட்டபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் சரீரத்தின்மேல் இரட்டைப் போர்த்துகொண்டு, உபவாசம்பண்ணி, இரட்டிலே படுத்துத் தாழ்மையாய் நடந்துகொண்டான்." தேவன் திரும்பவும் தம்மை ஒரு கிருபையுள்ள தேவனாகக் காண்பித்தார். ஆகாப் துக்கமாய் நடந்துகொண்ட காட்சியானது அவருக்குப் பல ஆண்டுகளுக்குத் தண்டனையை ஒத்திவைப்பதை ஆதாயப்படுத்திக் கொடுத்தது.

அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை திஸ்பியனாகிய எலியாவுக்கு உண்டாயிற்று, அவர், "ஆகாப் எனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினதைக் கண்டாயா? அவன் எனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்துகிறபடியினால், நான் அவன் நாட்களில் அந்தப் பொல்லாப்பை வரப்பண்ணாமல், அவன் குமாரன் நாட்களில் அதை அவன் வீட்டின்மேல் வரப்பண்ணுவேன்

*என்றார்" (வசனங்கள் 28, 29).*

இவ்வசனங்களில் வல்லமை நிறைந்த இரண்டு செய்திகளை நாம் கண்டறிகிறோம். முதலாவது, ஆகாப் போன்று இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டவர்கள்கூடத் தொடப்பட முடியும். இரண்டாவது, ஆகாபைப் போன்றவர்களுக்கும்கூடத் தேவன் தமது வாக்குத்தத்தங்களைக் கனப்படுத்துகிறார். கிளைட் மில்லர் என்பவர் பின்வரும் உற்றுநோக்கலை ஏற்படுத்தினார்:

> இஸ்ரவேல் மற்றும் யூதா இராஜ்யங்களின் மிகவும் துன்மார்க்கரான அரசர்கள் தேவனிடத்தில் திரும்பியபோது, அவர்கள்மீது அவர் பரிவிரக்கம் கொண்டவரானார் மற்றும் அவர் "பிரதான பாவியை" இரட்சிக்க முடிந்தது (1 தீமோத்தேயு 1:15) என்றால், மனம் வருந்தி கீழ்ப்படிதலில் அவரிடம் வருகிற எல்லாரையும் இரட்சிப்பதற்கான அவரது வல்லமை மற்றும் மனவிருப்பம் ஆகியவற்றிற்கு எல்லை எதுவும் இருப்பதில்லை (எபிரெயர் 5:7-9).[13]

இந்த அதிகாரம் இவ்விடத்தில் முடிகிறது, ஆனால் இந்த வரலாறு இவ்விடத்தில் முடிவதில்லை. ஆகாபின் மனந்திரும்புதல், அது மனந்திரும்புதல் என்று அழைக்கப்பட முடியுமென்றால், குறுகிய வாழ்நாள் உடையதாக இருந்தது. ஆகாபுக்கு எதுவும் நடக்கவில்லை. *மூன்று ஆண்டுகள்* கடந்து சென்றன (1 இராஜாக்கள் 22:1), மற்றும் ஒன்றும் நடக்கவில்லை. ஆகாபின்மீது கொள்ளை நோய் எதுவும் வரவில்லை. வானத்திலிருந்து மின்னல் எதுவும் தாக்கவில்லை; பூமிதிறந்து அவரை விழுங்கிவிடவில்லை. ஆகாப் தமது பழைய வழிகளுக்குத் திரும்பிச்சென்றார்.[14] இரவு உணவு மேஜையில் யேசபேல், புத்தம்புதிய காய்கறிகளைக் கொண்ட கோப்பை ஒன்றை ஆகாபின் பக்க மாக, நகர்த்தி, "ஆகாப், கொஞ்சப் பட்டாணியும் கேரட்களும் சாப்பிடுங்கள். இவைகள் நான் உங்களுக்குக் கொடுத்த தோட்டத்தில் விளைந்தவை" என்று கூறுவதை என்னால் கற்பனை செய்துபார்க்க முடிகிறது. அவள் சிரித்து, "கிழவனான எலியா, நாபோத்தின் இரத்தத்தை நாய்கள் நக்கிய அதே இடத்தில் உங்கள் இரத்தத்தையும் நக்கும் என்று கூறினாரே, ஆனால் நீங்கள் இப்போது இருப்பதைக் காட்டிலும் அதிக நலமாக நான் ஒருக்காலும் கண்டதே இல்லை!" என்று கூறியிருக்கலாம். இருப்பினும், ஒரு நாய் குரைக்கும்போதெல்லாம் ஆகாப் ஒரு பயம்நிறைந்த பார்வையை ஓட்டியதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது.

அத்துடன் நாம் 22ம் அதிகாரத்திற்கு வருகிறோம். சீரியாவுடன் யுத்தம் எதுவும் இல்லாத நிலையில், மூன்று ஆண்டுகள் கடந்து சென்றிருந்தன; இப்போது யுத்தம் திரும்பவும் தொடங்கிற்று. பெனாதாத் தான் செய்யப்போவதாகக் கூறியிருந்ததை இன்னும் செய்திருக்கவில்லை; கீலேயாத்திலுள்ள ராமோத் இன்னமும் சீரியாவின் கைகளில் இருந்தது. ஆகாப், யுத்தத்திற்கு ஆயத்தம் செய்யவும் யுத்தம் செய்யவும் யூதாவின் இராஜாவினுடைய உதவியை நாடினார். போகவேண்டாம் என்று அவரைத் தேவனுடைய தீர்க்கதரிசி ஒருவர் எச்சரித்தார். அந்தத் தீர்க்கதரிசியின் சொற்கேட்க ஆகாப் மறுத்துவிட்டார்; இருந்தபோதிலும்

அவர் மிகவும் பதட்டமாக இருந்தார். அவர் வேஷம்மாறி தம்மை உருமறைத்துக் கொண்டு யுத்தத்திற்குச் சென்றார். அவர் வழக்கப்படி தமது ஆயுத உடைக்கு மேலாகத் தமது இராஜரீக உடைகளை அணியவில்லை. சீரியாவின் இராஜாவாகிய பெனாதாத், ஆகாபைத் தேடிக்கண்டுபிடிப்பதற்கு முப்பத்திரண்டு இரதங்களின் வீரர்களையும் அனுப்பினான், ஆனால் அவர்களால் அவரைக் கண்டுபிடிக்க இயலவில்லை. பின்பு பெயர்தெரியாத, இலக்கு வைக்காத வில்வீரன் ஒருவன் காற்றில் எய்த அம்பு ஒன்று ஆகாபின் கவசத்தின் சந்துகளுக்குள் பட்டது. ஒரு இரத்தக் குழாய் துண்டிக்கப்பட்டது. ஆகாப் இரதத்தில் கிடையாக நிறுத்தி வைக்கப்பட்டார், ஒருவேளை அவர் காயப்படவில்லை என்பதுபோல் தோற்ற மளிப்பதற்காக இவ்வாறு நிறுத்தப்பட்டிருக்கலாம்; ஆனால் ஆகாபினுடைய இருதயத்தின் ஒவ்வொரு துடிப்புடனும், அவரது உயிரின் இரத்தமானது, அவர் இறக்கும் வரையில் இரதத்தின் தட்டில் வடிந்தது. 38ம் வசனத்தில் நாம், "அந்த இரதத்தையும் அவனுடைய கவசத்தையும் சமாரியாவின் குளத்தில் கழுவுகிறபோது, கர்த்தர் சொல்லியிருந்த வார்த்தையின்படியே நாய்கள் அவன் இரத்தத்தை நக்கினது" என்று வாசிக்கிறோம். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிச்சயமானவைகளாக இருந்தன.

அது இன்னும் இவ்வரலாற்றை முடிப்பதாக இருக்கவில்லை. இருபது ஆண்டுகள் கடந்து சென்றன. தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகள் அல்ல, தேவனுடை திட்ட அட்டவணைகள் நம்முடைய திட்ட அட்டவணைகள் அல்ல என்று நாம் நினைவூட்டப்படுகிறோம். அந்த இருபது ஆண்டுகளில் அதி கமான விஷயங்களை நடைபெற்றிருந்தன. எலியா சுழற்காற்றில் பரலோகம் சென்றார். எலிசா தமது மாபெரும் ஊழியத்தைத் தொடங்கியிருந்தார். ஆகாபின் மகன் யோராம் அரியணைக்கு ஆளவந்தார், யேசபேல் தெய்வபக்தி யற்ற மகாராணியாக இருந்தாள். இருப்பினும், கடைசியில் இந்த வரலாற்றின் முடிவுக்கான வேளை வந்தது (2 இராஜாக்கள் 9).

கீலேயாத்திலுள்ள ராமோத்தில் நடந்த யுத்தத்தில் யோராம் காயப்பட்டார். அவர் தமது படைகளுக்குப் பொறுப்பாளியாக யேகூவை விட்டுவிட்டு, யெஸ்ரெயேலுக்குத் திரும்பிச் சென்றார். யேகூவை அடுத்த அரசராக அபிஷேகம் செய்வதற்காக எலிசா ஒரு தீர்க்கதரிசியை அனுப்பினார்.

யேகூ தமக்குப் பின்னால் தொடர்ந்து வந்த ஒரு படையுடன், யெஸ்ரெயேலை நோக்கிப் பயணம் செய்யத் தொடங்கினார். அவர் ஆறு அல்லது ஏழுமைல்கள் தூரத்தில் இருந்தபோது, கோபுரத்தின்மேல் நிற்கிற ஜாமக்காரன் அவரைக் கண்டான். யெகூவைச் சந்திக்கும்படி ஒரு செய்தியாள் அனுப்பப்பட்டான். அவனிடத்தில் யேகூ, "என் பிறகே திரும்பிவா" என்று கூறினார் (வசனம் 19), அவனும் அவ்வாறே செய்தான். இரண்டாவது செய்தியா அனுப்பப்பட்டான்; அவனும் யேகூவைப் பின் தொடரலானான். யேகூ நகரை நெருங்கி வந்தவேளையில், ஜாமக்காரன், "ஓட்டுகிறது நிம்சியின் குமாரனாகிய யெகூ ஓட்டுகிறதுபோல இருக்கிறது; அதிவேகமாய் ஓட்டுகிறான்" என்று அறிக்கை செய்தான் (வசனம் 20).

யோராமும் யூதாவின் இராஜாவாகிய அகசியாவும், யேகூவைச் சந்திக்க வெளியே சென்றனர். அவர்கள் எங்கு சந்தித்தனர் என்பதைக் கவனியுங்கள்: "யெஸ்ரயேலியனாகிய நாபோத்தின் நிலத்திலே அவனுக்கு எதிர்ப்பட்டார்கள்" (வசனம் 21) - இஸ்ரவேல் அரசரின் நிலத்தில் அல்ல, ஆனால் நாபோத்தின்

*நிலத்தில் இது நடந்தது. தேவனைப் பொறுத்தமட்டில் அது நாபோத்தின் நிலமாகவே இருந்தது; ஒரு நிலமானது எந்தக் குடும்பத்திற்குத் தரப்பட்டதோ அந்தக் குடும்பத்தை விட்டு எடுக்கப்பட முடியாது என்று நியாயப்பிரமாணம் கட்டளையிட்டிருந்தது.*

*யேகூ யோராமைக் கொன்றுபோட்டுப் பின்பு நகருக்குள் சென்றார். என்ன நடந்தது என்பதைக் கேள்விப்பட்ட யேசபேல், "தன் கண்களுக்கு மையிட்டு, தன் தலையைச் சிங்காரித்துக்கொண்டு, ஜன்னல்வழியாய் எட்டிப்பார்த்தாள்" (வசனம் 30).*

> *யெகூ ஒலிமுகவாசலில் வந்தபோது, அவள்: தன் ஆண்டவனைக் கொன்ற சிம்ரி. [சிம்ரி சூழ்ச்சி செய்து அரியணையைக் கைப்பற்றியிருந்த காரணத்தினால் அவள் அவரை "சிம்ரி" என்று அழைத்தாள்.] ஷேமம் அடைந்தானா என்றாள். அப்பெழுது அவன் தன்முகத்தை அந்த ஜன்னலுக்கு நேராக ஏறெடுத்து: என் பட்சத்தில் இருக்கிறது யார்? யார்? என்று கேட்டதற்கு, இரண்டு மூன்று பிரதானிகள் அவனை எட்டிப்பார்த்தார்கள். அப்பொழுது அவன்: அவளைக் கீழே தள்ளுங்கள் என்றான்; அப்படியே அவளைக் கீழே தள்ளினதினால், அவளுடைய இரத்தம் சுவரிலும் குதிரைகளிலும் தெறித்தது; அவன் அவளை மிதித்துக்கொண்டு, உள்ளேபோய், புசித்துக் குடித்தபின்பு நீங்கள் போய்ச் சபிக்கப்பட்ட அந்த ஸ்திரீயைப் பார்த்து, அவளை அடக்கம்பண்ணுங்கள்; அவள் ஒரு ராஜகுமாரத்தி என்றான். அவர்கள் அவளை அடக்கம்பண்ணப்போகிறபோது, அவளுடைய தலையோட்டையும் கால்களையும் உள்ளங்கைகளையுமே அல்லாமல் வேறொன்றையும் காணவில்லை. ஆகையால் அவர்கள் திரும்பிவந்து அவனுக்கு அறிவித்தார்கள்; அப்பொழுது அவன்: இது கர்த்தர் திஸ்பியனாகிய எலியா என்னும் தம்முடைய ஊழியக்காரனைக்கொண்டு சொன்ன வார்த்தை; யெஸ்ரயேலின் நிலத்திலே நாய்கள் யேசபேலின் மாம்சத்தைத்தின்னும் என்றும் (வசனங்கள் 31-36).*

*யாரேனும் ஒருவர், ''விஷயங்களை வேதாகமம் ஏன் நமக்கு அதைப்போன்று கூறுகிறது? அது மிகவும் அருவருப்பானதாக உள்ளது!" என்று கூறலாம். இது நேர்த்தியான காட்சியல்ல, ஆனால் பாவத்தின் விளைவுகள் ஒருக்காலும் நேர்த்தியானவைகளாக இருப்பதில்லை. பாவத்தைப் பற்றிய யாவற்றையும் நீங்கள் அறிய விரும்பினால், ஆகாபின் தந்தமயமான அரண்மனையில் கண்ணோக்க வேண்டாம், ஆனால் அவரது இரத்தத்தை நாய்கள் நக்கியதைக் கண்ணோக்குங்கள். யேசபேல் தனது அணிகலன்களையும் நேர்த்தியான உடைகளையும் அணிந்த நிலையில் நீங்கள் அவளைக் கண்ணோக்க வேண்டாம், ஆனால் அவளது மாம்சத்தை தின்று வயிறு உப்பிப்போன நாய்களை கண்ணோக்குங்கள். மதுபானங்களை மேன்மைப்படுத்தும் விளம்பரங்களை அல்ல ஆனால் நெடுஞ்சாலைகளில் கிடக்கும் இளைஞர்களின் முறிந்த உடல்களைக் கண்ணோக்குங்கள். பாலுறவில் ஒழுக்கவீனத்தைக் கனப்படுத்தும் திரைப்படங்களில் அல்ல, ஆனால் எய்ட்ஸ் என்ற ஆட்கொல்லி நோயின் பயங்கரத்தில் கண்ணோக்குங்கள்!*

## முடிவுரை

ஆகாப் மற்றும் யேசபேல் ஆகியோரின் வரலாறு கவலைக்குரிய ஒன்றாக உள்ளது, ஆனால் அது ஒரு கவலைக்குரிய வரலாறாக மாத்திரம் இருப்பதில்லை. தேவன் நமக்காகக் கொண்டுள்ள பாடங்களை நாம் பற்றிக்கொள்ள முடியுமென்றால், அதைக் காட்டிலும் அதிகமானதாக அந்த வரலாறு நமக்குள்ளது:

முதலாவது, தேவனுடைய பொறுமைக்கும் ஒரு முடிவு உண்டு - மற்றும் அது எப்போது வரும் என்பதை ஒருவரும் அறிய இயலாது. தேவனுடைய இரக்கம் மற்றும் அன்பின் ஏற்பாடுகளைப் புறக்கணித்தலைக் காட்டிலும் அதிகம் அபாயமானது வேறதுவும் இல்லை. நமது முந்திய பாடத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி "திரும்பிவர இயலாத இடத்தை" ஒருவர் எப்போது அடைகிறார் என்று நான் அறிவதில்லை. இருப்பினும் சிலர் அந்த இடத்திற்கு அபாயகரமான வகையில் நெருக்கமாக இருக்கச் சாத்தியக்கூறு உள்ளது - மற்றும் சிலர் ஒருவேளை அதைக் கடந்தும் சென்றிருக்கலாம்.

இரண்டாவது, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிச்சயமானவைகளாக உள்ளன - அவற்றை எவரொருவரும் மாற்ற இயலாது. தேவன் சிலவற்றைக் கூறுகிறபோது, அது அவ்வாறே உள்ளது. நாம், "இது நிச்சயமாக இருக்க முடியாது" என்று நினைக்கலாம், ஆனால் அதைத் தேவன் கூறினார் என்றால், நீங்கள் அதைக்குறித்து நிச்சயமாய் இருக்க முடியும். "நான் ஆகாபைப் போன்றோ அல்லது யேசபேலைப் போன்றோ அவ்வளவு மோசமாக இருப்பதில்லை" என்று மறுத்துரைக்கலாம். விஷயம் அதுவல்ல. நீங்கள் ஒரு பாவியாக இருக்கிறீர்கள் (ரோமர் 3:23), மற்றும் பாவிகளுக்குத் தேவனுடைய வாக்குத்தத்தம் தெளிவானதாக உள்ளது: "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23). இதை விசுவாசித்து, இரக்கத்திற்காகக் கர்த்தரிடமாய் ஓடுங்கள்!

மூன்றாவது, தேவனுடைய அறிவிப்புகளில் எப்போதுமே இரக்கம் அடங்கியுள்ளது, மற்றும் எந்த ஒரு மனிதரும் அதை மறுக்கக் கூடாது. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் சாபங்களாகவோ அல்லது ஆசீர்வாதங்களாகவோ எப்படியிருந்தாலும், அவற்றில் எப்போதுமே, எடுத்துரைக்கப்பட்ட அல்லது மறைமுகமாக உணர்த்தப்பட்ட நிபந்தனைகள் உள்ளன. இருதயம் கடினப்பட்டிருந்த ஆகாப் கூடத் *தாழ்மையைக்* காண்பித்ததன் மூலமாக தேவனுடைய கோபத்திலும் மூன்று ஆண்டுகள் நிலைநிற்க முடிந்திருந்தது. தேவனுடைய கோபமானது, ஆகாபின் பகுதியில் உண்மையான மற்றும் தொடர்ந்த மனந்திரும் புதலினால் எல்லையற்ற வகையில் தடுக்கப்பட்டிருக்க முடியும். தேவனுடைய இரக்கம் பற்றி அறிந்திருங்கள் மற்றும் தேவனுடைய ஆசீர்வாதங்களை உரிமை கோருங்கள். உங்கள்மீது தேவனுடைய பொறுமையின் எல்லை முடிந்துபோவதை அனுமதிக்காதீர்கள்!

*ஆசிரியர் குறிப்பு: R. G. லீ என்பவர், "சம்பளநாள் குறிப்பிட்டநாள்" என்ற தலைப்பில், ஆகாப் மற்றும் யேசபேல் ஆகியோரை அடிப்படையாகக் கொண்டு ஒரு பிரசங்கத்தைப் பிரசங்கித்தார், இந்தப் பாடத்தில் நான் பயன்படுத்தியுள்ள சில உருவங்களுக்கு நான் அந்தப் பிரசங்கத்திற்குக் கடன்பட்டுள்ளேன்.*

---

குறிப்புகள்

[1]இதே கொள்கையைப் பற்றிப் பேசி "சடிதியில்" என்ற வார்த்தையையும்

*பயன்படுத்தும் இன்னொரு வேதவசனப்பகுதி நீதிமொழிகள் 6ம் அதிகாரமாகும். 12ம் வசனமும் அதைத் தொடர்ந்து வரும் ஒருசில வசனங்களும் "துன்மார்க்கன்" ஒருவனின் குணங்களைப் பற்றிப் பேசுகின்றன; பின்பு 15ம் வசனம் அவனது முடிவைப் பற்றிக் கூறுகிறது: "ஆகையால் சடியிதில் அவனக்கு ஆபத்து வரும்; சகாயமின்றிச் சடிதியில் நாசமடைவான்"! (என்னால் வலியுறுத்தப்படுகிறது.) [2]இந்த நகரங்கள் இருந்த மிகச்சரியான இடம்பற்றி இன்றைய நாட்களில் நாம் நிச்சயமற்றவர்களாக இருக்கிறோம். [3]புதிய ஏற்பாட்டின் பல விளக்கங்களும் இந்தக் கொள்கையைப் பிரதிபலிக்கின்றன: "தேவன் அவர்களை [புறஜாதியாரை] ஒப்புக்கொடுத்தார்" (ரோமர் 1:24, 26, 28). (*KJV *வேதாகமம் "God gave them up" "தேவன் அவர்களைக் கைவிட்டுவிட்டார்" - ஏனெனில் அவர்கள் தேவனைக் கைவிட்டிருந்தனர் - என்ற இன்னும் அதிக வரவளைவையான சொற்றொடரைக் கொண்டுள்ளது.) விழுந்துபோகிறவர்களில் சிலர், "மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்" (எபிரெயர் 6:6) என்னுமளவுக்கு இருதயம் கடினப்பட்டுப் போகின்றனர். 1 யோவான் 5:16ம் வசனம், "மரணத்துக்கு ஏதுவான பாவம்" பற்றிப் பேசுகிறது. [4]முந்திய பாடத்தைக் காணவும். [5]இந்த இரு நகரங்களுக்கும் இடையில் இருந்த தொலைவு பற்றி அதிகாரமுள்ள தகவல்கள் வேறுபடுகின்றன. [6]காண்க எண்ணாகமம் 36:1-9; 27:1-11. [7]1 இராஜாக்கள் 22:39; மேலும் காண்க சங்கீதம் 45:8; ஆமோஸ் 3:15. [8]ஆமோஸ் 6:4. [9]அது தந்தத்தைப் போலிருந்த வெள்ளைச் சலவைக்கற்களாக இருந்திருக்கலாம். [10]*KJV *[மற்றும் தமிழ்] வேதாகமத்தில் "பேலியாளின் மக்களாகிய இரண்டுபேரை" என்றுள்ளது, இது [எபிரெய வசனத்தின்] நேரடியான மொழிபெயர்ப்பாக உள்ளது மற்றும் இது, "தகுதியற்றவர்களின் மகன்கள்" என்று அர்த்தப்படுகிறது.*

*[11]18ம் வசனத்தைக் காணவும். [12]இது தேவனுடைய சட்டமல்ல, ஆனால் அண்மைக் கிழக்கு நாடுகளில் இருந்த வழக்கமான சட்டமாகும்.* [13]Clyde M. Miller, *Living Word Commentary on First and Second Kings* (Abilene, Tex.: ACU Press 1991), 298. *[14]பிரசங்கி 8:11.*

## காட்சி - உதவி குறிப்புகள்

*பின்வரும் வார்த்தைகளைக் கொண்ட பெரிய காட்சி அட்டை ஒன்றைத் தயாரித்துக் கொள்ளுங்கள்: "தேவன், 'அதுபோதும்!' என்று கூறினார்"! அறிமுக விவரிப்புகளுடன் இதைப் பயன்படுத்துங்கள்; பின்பு ஆகாபுக்கும் யேசபேலுக்கும் தேவன் "அது போதும்!" என்று கூறியபொழுதான பாடத்தின் உச்சபட்சக் கணம் வரும்வரையில் அதைக் கீழே வைத்துவிடுங்கள். அவர்களின் மரணத்தைப் பற்றி நீங்கள் கூறுகையில் இந்த அட்டையைக் காட்சிக்கு வையுங்கள். பின்பு உங்கள் அழைப்பின் பகுதியாக அதைப் பயன்படுத்துங்கள்: "தேவனுடைய கிருபையைத் தொடர்ந்து புறக்கணிக்காதீர்கள். அவர் உங்களிடத்தில், 'அது போதுமானது!' " என்று கூறுவதைக் கேட்க விரும்பாதீர்கள்.*

## பாட வரைகுறிப்பு

*அறிமுகம்*

A. தேவனுடைய அன்பு மற்றும் இரக்கம் ஆகியவற்றின்மீதான பாடங்களை நாம் மகிழ்வுடன் அனுபவிக்கிறோம், ஆனால்

*தேவனுடைய நீதி மற்றும் பரிசுத்தம் - பாவத்தை எதிர் கொள்ளக் கூடாமை என்ற தேவனுடைய பக்கம் - பற்றியும் பிரசங்கியாது, நாம் தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் பிரசங்கிப்பவர்களாக இருக்க முடியாது (நடபடிகள் 20:27). எலியாவின் மீதான நமது தொடர் பாடங்கள் அந்த வகையான ஒரு பாடத்திற்கு இப்போது நம்மைக் கொண்டுவருகின்றன.*

B. *1 இராஜாக்கள் 21ம் அதிகாரத்திற்குச் செல்வதற்கு முன்னர், நாம் விளக்கியுரைக்கப்போகும் கொள்கையை நிலைநாட்டுவோமாக:*
   1. *பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகள்: நீதிமொழிகள் 29:1; 6:12, 15*
   2. *விவரிப்புகள்:*
      a. *சோதோம் மற்றும் கொமோரா (ஆதியாகமம் 19)*
      b. *இஸ்ரவேல் மற்றும் யூதா இராஜ்யங்கள் (2 நாளாகமம் 36)*
      c. *பெல்ஷாத்சார் (தானியேல் 5)*
      d. *ஏரோது அகிரிப்பா (நடபடிகள் 12; காண்க வசனம் 23)*
   3. *புதிய ஏற்பாட்டு விவரிப்புகள் (ரோமர் 1; எபிரெயர் 6; 1 யோவான் 5)*

C. *ஆகாப் மற்றும் யேசபேல் ஆகியோரின் துன்மார்க்கத்தை நாம் கண்டிருக்கிறோம். இப்போதும் நாம், வேதவாக்கியங்களிலேயே மிகவும் பழித்துரைக்கத்தக்க செயல்களில் ஒன்றைக் காண்போம் மற்றும் தேவன் "அது போதுமானாது!" என்று கூறுவதையும் நாம் காண்போம்.*

I. *நாபோத்துக்கு எதிரான பாவம் (21:1-16)*

A. *"இவைகளுக்குப் பின்பு" (வசனம் 1அ)*
   1. *எலியா பார்வையில் இருந்து மறைந்தபின்பு*
   2. *ஆகாபுக்கு இஸ்ரவேலும் தங்கள் வழக்கமான நடவடிக்கைகளை மீண்டும் தொடர்ந்த பின்பு.*

B. *ஆகாப் ஒரு தோட்டத்தை விரும்பினார், மற்றும் நாபோத் அதை அவருக்குத் தரவில்லை.*
   1. *வசனம் 1ஆ: தலைநகரமான சமாரியா யெஸ்ரெயேலில் இருந்து தெற்கே முப்பத்து ஐந்து முதல் நாற்பது மைல்கள் வரையிலான தூரத்தில் இருந்தது, ஆனால் ஆகாபுக்கு யெஸ்ரெயேலில் ஒரு அரண் மனை இருந்தது.*
   2. *வசனம் 2: ஆகாப் நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை விரும்பினார், ஆனால் இஸ்ரவேல் மக்கள் கானான் நாட்டிற்குள் வந்தபோது, கோத்திரங்களுக்கும் குடும்பங்களுக்கும் நிலம் ஒதுக்கப்பட்டது, அப்படி ஒதுக்கப்பட்ட நிலமானது அந்தந்தக் குடும்பத்திற்கு உரியதாக* <u>நிலைத்திருக்க வேண்டியதாயிற்று</u> *(லேவியராகமம் 25).*
   3. *வசனம் 3: நாபோத், பாகாலை வணங்காத முழங்கால்களைக் கொண்ட ஏழாயிரம் பேர்களில் ஒருவராக இருந்தார்.*

4. வசனம் 4: ஆகாப் திராட்சத் தோட்டத்தை பெற இயலாதபடியால் சிடுசிடுப்பாக இருந்தார்.
5. வசனம் 5: பிரச்சனை என்ன என்று காண்பதற்கு யேசபேல் வந்தாள்.
6. வசனம் 6: ஆகாப் தமது "கவலையின் கதையை" கூறினார்.
7. வசனம் 7: யேசபேல் தனது கணவரை ஏளனம் செய்தாள். பின்பு "நான் அதைப் பற்றிக் கவனித்துக் கொள்வேன்" என்று கூறினாள்.

C. அந்தத் தோட்டத்தைப் பெறுவதற்கு அவர்கள், தேவனுடைய நியாயப்பிரமாணங்களைப் பிறழ்வுசெய்த ஒரு சூழ்ச்சியை வடிவமைத்தனர்.
   1. வசனம் 9:
      a. ஒரு உபவாசம் அறிவிக்கப்பட்டது. பிரமாண எண் 1: தேவனுடைய கோபத்தைத் தணிப்பதற்காக உபவாசத்தை அறிவியுங்கள்.
      b. நாபோத்துக்கு "மக்களின் மத்தியில்" கனத்திற்குரிய இடம் தரப்பட்டது. பிரமாண எண் 2: எல்லா மக்களும் உபவாசத்தில் ஈடுபட வேண்டும்.
   2. வசனம் 10:
      a. நாபோத்தைப் பற்றி பொய்கூறும்படி பேலியாளின் மனிதர்களுக்கு இலஞ்சம் கொடுக்கப்பட்டு இருந்தது. நியாயப்பிரமாண எண் 3: இரண்டு அல்லது மூன்று சாட்சிகளைக் கொண்டிருங்கள்.
      b. அவர்கள் நாபோத்தின் மீது தேவதூஷணக்குற்றம் சாட்டினர். நியாயப்பிரமாண எண் 4: தேவதூஷணம் மரணதண்டனைக்குரிய குற்றமாக இருந்தது. நியாயப்பிரமாண எண் 5: அது கல்லால் எறியப்படும் மரணமாக இருக்க வேண்டும்.

D. நாபோத் கொல்லப்பட்டார், மற்றும் யேசபேலும் ஆகாபும் மகிழ்ச்சியடைந்தனர்.
   1. நாபோத் (தமது வாரிசுகளுடன்; காண்க 2 இராஜாக்கள் 9:26) கொல்லப்பட்டார்.
   2. வசனம் 14: செய்தி யேசபேலுக்கு அனுப்பப்பட்டது.
   3. வசனம் 15: அவள் அதை ஆகாபிடம் கூறினாள்.
   4. வசனம் 16 ஆகாப் மீண்டும் மகிழ்ச்சியடைந்தார்.

II. தேவனுடைய பொறுமையின் எல்லை முடிந்துபோனது (21:17-24, 27-29; 22:38; 2 இராஜாக்கள் 9:21-36).

A. எலியா தேவனுடைய செய்தியை அறிவிக்கிறார்.
   1. வசனங்கள் 17-19: கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு மீண்டும் வந்தது.
   2. வசனங்கள் 20-24: எலியா ஆகாபைக் கண்டு தேவனுடைய செய்தியை அறிவித்தார்:
      a. நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கிய அதே

இடத்தில் ஆகாபின் இரத்தத்தை நக்கும் (காண்க வசனம் 19).

b. நாய்கள் யெஸ்ரயேலில் யேசபேலைத் தின்னும் (வசனம் 23).

c. யேகூ உட்பட மற்ற மனிதர்களும் அங்கிருந்தனர் (2 இராஜாக்கள் 9:25). இந்தக் காட்சியும் செய்தியும் யேகூவின் மனதில் அளிக்க இயலாதபடி பதிந்தன.

3. வசனங்கள் 27-29: திகைப்பு! ஆகாப் பயமடைந்து தம்மைத் தாழ்த்தினார், பல ஆண்டுகளுக்கு தண்டணை தள்ளிப்போடப்பட்டதை ஆதாயப்படுத்திக்கொண்டார்.

B. துரதிர்ஷ்டவசமாக, ஆகாபின் மனந்திரும்பதல் குறுகிய காலமே வாழ்ந்திருந்தது. ஆகாபுக்கு ஒன்றும் நடக்கவில்லை, அவர் தமது பழைய வழிகளுக்குத் திரும்பினார் (காண்க பிரசங்கி 8:11).

C. தேவனுடைய அச்சுறுத்தும் வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. ஆகாப் (1 இராஜாக்கள் 22)

a. ஆகாப் வேஷம்மாறி யுத்தத்திற்குச் சென்றார். பெயரற்ற குறிபார்க்காத ஒரு வீரனுடைய அம்பானது ஆகாபின் இராணுவ உடையின் சந்திற்குள் பாய்ந்தது.

b. வசனம் 38: தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிச்சய மானவை.

2. யேசபேல் (2 இராஜாக்கள் 9)

a. இருபது ஆண்டுகள் கடந்து சென்றன. எலியாவுக்குப் பதிலாக எலிசா வந்தார். ஆகாபின் மகனான யோராம் அரியணையில் இருந்தார், மற்றும் யேசபேல் தேவபக்தி யற்ற மகாராணியாக இருந்தாள். ஆகாப் மற்றும் யேசபேல் ஆகியோரின் வரலாற்றின் முடிவிற்கான வேளை வந்தது.

b. 2 இராஜாக்கள் 9:21, 25, 26, 30-36 ஆகிய வசனங்களை வாசிக்கவும். என்ன ஒரு கவலைமிக்க, கவலைமிக்க வரலாறு!

முடிவுரை

A. இந்த வரலாற்றில் இருந்து நாம் பின்வருபவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்:

1. தேவனுடைய பொறுமைக்கு ஒரு முடிவு உண்டு - அது எப்போது வரும் என்று எவரும் அறிய முடியாது.

2. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிச்சயமானவை - அவற்றை எவராலும் மாற்ற முடியாது.

3. தேவனுடைய அறிவித்தல்கள் இரக்கத்தை உள்ளடக்கியிருக்கின்றன - எவரொருவரும் அதை மறுக்கக் கூடாது.

B. தேவன் இரக்கத்தின் தேவனாக*வும்* நீதியின் தேவனாக*வும்* இருக்கிறார் என்பதை நாம் ஒருக்காலும் மறவாதிருப்போமாக.